[1975 மார்ச் 21

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த குடியாத்தம் தீ விபத்து சம்பந்தமாக மிகவும் நல்ல முறையில் நம்முடைய அரசு உதவி செய்கிறது. இருந்தாலும் கூட அதிலே சிலபேர் விடுபட்ட நிலையிலே இருக்கிறார்கள். சங்கம் அமைப்பது பற்றிச் சொன்னார்கள். அந்தச் சங்கங்களுக்கு ஷேர் கேபிடல் கூடச்செலுத்த முடியாமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு, சில காரணங்களால் விடுபட்டிருப்பவர்களுக்கு, அரசாங்கமே ஏற்று சங்கங்கள் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 245 நெசவாளர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, இதுபோல் நெசவாளர்களின் வீடுகள் எரிந்துவிட்டால் 80 ரூபாய் கொடுக்கப்படுவதில் உடனடியாக வீடு கட்டிக்கொள்ள முடிவதில்லை. ஆகவே, அரசாங்கத்திலுள்ள புறம் போக்கில் இருக்கின்ற பனை மரங்களை வெட்டிக்கொள்ள அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது குறிப்பிட்ட ஒரு ஊரிலே நடந்த நிகழ்ச்சி. இதற்கென்று தனியான முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த குடியாத்தம் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட சொத்தின் மொத்த மதிப்புத் தொகை எவ்வளவு? அதற்கு பிரதம மந்திரி நிதியிலிருந்து எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது? முதலமைச்சரவர்கள் நிதியிலிருந்து எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பிரதம மந்திரியிடத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய்; நம்முடைய மாநிலத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய். பல்வேறு உதவியும் செய்திருக்கிறோம். தனிப்பட்ட நபர்களும் உதவி செய்திருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தத் தீ விபத்தின் காரணமாக பலபேர்கள் தங்களுடைய தறிகளையும், வீடுகளையும், நூல்களையும் இழந்திருக்கிறார்கள். அந்த இழப்பை சரிக்கட்டுவதற்காக ஏதாவது டொனேஷன் மூலம் நிதி சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வாழ்வு அளிக்க எந்த அளவிற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரங்களை இப்பொழுது தான் விவரமாகச் சொன்னேன். கிட்டத்தட்ட 4 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய்க்கு நாம் உதவி செய்திருக்கிறோம்.

1975 மார்ச் 21]

காவல்துறை ரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள்.

*401 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74ஆம் ஆண்டில், தமிழக போலீஸ் இலாகாவிற்கு எடுக்கப்பட்ட ரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, குற்றப் புலனாய்வுத் துறைக்கு நேரடித் தேர்வு மூலம் சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படுவதில்லை. சென்னை மாநகரக் காவல் துறையிலும், சரகங்களிலும் பணிபுரியும் சப்-இன்ஸ்பெக்டர்களில் குறிப்பிட்ட சிலரைத் தேர்ந்தெடுத்து இத்துறையில் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். அவ்வகையில் 1973-74-ல் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 18.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அப்படிக் குறிப்பிட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு எந்தவிதமான தகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன? இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் முஸ்லீம்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சப்-இன்ஸ்பெக்டர் முஸ்லீமாக இருந்து, தகுதிகளும் இருந்து, இதற்கு வருவதற்கு ஒப்புதலும் அளிப்பார்களேயானால் வருவதற்குத் தடை கிடையாது. அவர்களுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற தகுதி, "ஜெனரல் ரிக்கார்ட்" எப்படி இருக்கிறது என்று பார்க்கப்படுகிறது. "ரிவார்ட்ஸ்" பெற்றிருப்பது; பனிஷ்மெண்ட் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கப்படுகிறது. இவைகளுக்கெல்லாம் மேலாக சி.ஐ.டி. டிபார்ட்மெண்டில் வேலை செய்வதற்கு விருப்பம் இருக்கிறதா என்று அறிந்து அவர்கள் அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்த இரகசிய போலீசார்கள் எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்குச் சென்று குறிப்பெடுக்கிறார்கள். அதேபோல் ஆளுங்கட்சிக் கூட்டங்களிலும் சென்று குறிப்பெடுப்பதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் இந்தத் துறைக்கு என்ற கேள்வி. அதுபற்றித் தனியான விவரங்கள் கோரினால் விவரம் அளிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கிரைம் பிராஞ்சுகளிலே, குறிப்பிட்ட ஆண்டுகள் சேவை செய்துவிட்டு மறுபடியும் ஜெனரல் போலீசுக்கு வருவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா? ஏனென்றால் ஒரு சிலர் ஸ்பெஷல் கேசுக்காகப் போய் பல்லாண்டு

காலமாக அந்தத் துறையிலேயே இருக்கிறார்கள். மறுபடியும் மாற்றம் ஏற்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதையும் அனுதாபத்தோடு அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கிரைம் பிராஞ்சிலேயிருந்து மறுபடியும் இயல்பான இந்தப் பணிக்கு வருவதற்குத் தடை எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்படும் இரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு பயிற்சி ஏதாவது அளிக்கப்படுகிறதா ? என்னென்ன பயிற்சி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்களுக்கு என்று சில பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பொதுவாக இப்பொழுது கள்ள நோட்டு போன்றவைகளைக் கண்டுபிடிப்பதற்காக நாசிக்கிலே ஒரு டிரெயினிங் அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சிக்கு செல்கிறார்கள். இந்தியாவில் வேறு சில பகுதிகளில் குற்றப் புலனாய்வுக்காக பயிற்சி அளிக்கப்படும் முகாம் இருக்கிறது. அங்கேயும் பொதுவாக போலீசாருக்குப் பயிற்சி அளிக்கப்படும் நேரத்தில் இவர்களும் சிறப்பாகப் பயிற்சிகளைப் பெறுகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார்; இந்த இரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மற்ற போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு அளிக்கப்படுவதைக்காட்டிலும் விசேஷமான அலவன்ஸ் ஏதாவது தரப்படுகிறதா ? அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று குற்றங்களை ஆய வேண்டியிருக்கிறது. எனவே அவர்கள் எங்கே செல்ல வேண்டுமானாலும் செல்வதற்கு பாஸ் அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, குற்றங்களை ஆய்வதற்கான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கின்றன. சிறப்பாக ஏதாவது ஊதியம் தரப்படுகிறதா என்று கேட்டார்கள். சிறப்பாக, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், எஸ். பி.க்கு 150 ரூபாய் ஸ்பெஷல் பேயும், டி.எஸ்.பி.க்கு 75 ரூபாயும், இன்ஸ்பெக்டருக்கு 50 ரூபாயும், சப்-இன்ஸபெக்டருக்கு 25 ரூபாயும், ஹெட்கான்ஸ்டபிளுக்கு 10 ரூபாயும் அளிக்கப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த கிரைம் பிராஞ்ச் சப்-இன்ஸ்பெக்டர்கள், ஸ்பெஷல் பிராஞ்ச் சப்-இன்ஸ்பெக்டர்கள், இது சம்பந்தமுள்ள அதிகாரிகள் தங்களை இன்னார் என்று பொதுமக்களிடம் அடையாளம் காட்டிக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனை ஏதாவது இருக்கிறதா ? உத்தரவு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அடையாளம் காட்டிக்கொள்ளாமல் இருந்தால்தான் அவர்கள் ஒற்றர்களாக இருக்க முடியும்.